**உடுநுவர பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**உடுநுவர** பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு **உடுநுவர** பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை கட்டிடம் அமைந்துள்ள காணியை மதிப்பிட்டு கணக்கீடு செய்யதிருக்காததுடன், மீளாய்வாண்டினுள் சபையின் இரண்டு கட்டிடங்களை திருத்துவதற்கு செலவிட்ட ரூபா 3,975,287 மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | 2024 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதெனை. | காணி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் கணனி மற்றும் அச்சு இயந்திரம் கொள்வனவு செய்யவதற்காக விலைகள் கோரி விலைமனு முன்வைக்கப்படாது ரூபா 600,000 செலவு வரவு வைக்கப்பட்டு கடன்கொடுனரின் கீழ் தவறுகளுடன் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - | உடன்படிக்கை அல்லது கடப்பாட்டுடன் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய ரூபா 21,394,150 ஆன முத்திரைக் கட்டணம் இரண்டு முறை, முத்திரை கட்டண கணக்கிற்கு சீராக்கிய காரணத்தால், மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 21,394,150 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் டெண்டர் கோரி வழங்கிய கடையறை ஒன்றிற்காக கிடைத்திருந்த ரூபா 1,446,550 ஆன முற்பணம், வருமானத்திற்கு செலவு வைக்கப்படாது முற்பண கட்டுப்பாட்டு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தால் கிடைக்க வேண்டிய முற்பணம் மற்றும் ஆண்டின் வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் முற்பண வருமானமான ரூபா 1,446,550 தொகை முற்பண கட்டுப்பாட்டு கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதென. | கணக்கு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | கடந்த ஆண்டிற்குரியதாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்திய ரூபா 937,584 ஆன நிலுவை பங்களிப்பு தொகை மீளாய்வாண்டின் செலவாக கருதி கணக்கீடு செய்த காரணத்தால், ஆண்டின் செலவு அப் பெறுமானத்தால் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மீண்டும் அவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க பொறுப்பேற்பதென. | கடந்த ஆண்டுகளின் செலவு திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் கெலிஓய பொது சந்தை 13 கடையறைகளில் இருந்து கிடைக்க வேண்டிய முற்பணத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கையில், மீளாய்வாண்டிற்கான முற்பண தவணை ரூபா 977,664 பெறுவனவை மீண்டும் முற்பண கட்டுப்பாட்டுக் கணக்கை வரவு வைத்து வருமானத்திற்கு செலவு வைத்ததில் அப் பெறுமானத்தால் பெற வேண்டிய முற்பணம் மற்றும் வருமானம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன. | 2023 ஆண்டின் முற்பண வருமானமான ரூபா 2,993,824 தொகையை முற்பண கட்டுப்பாட்டு கணக்கின் கீழ் கணக்கீடு செய்துள்ளதென. | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு ஆண்டிறுதியில் ரூபா 12,087 தொகை கூடுதலாக செலுத்தியிருந்த போதும், நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 581,643 காண்பித்திருந்த காரணத்தால், ரூபா 593,730 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | 2024 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | இணக்கமின்மையை இனங்கண்டு கணக்கு மீதியை சீராக்க வேண்டும். |

**1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது 04 வருமான விடயங்களில் ரூபா 7,689,649 தொகை இறுதிக் கணக்கு மீதி மற்றும் அட்டவணை பிரகார மீதிகளை செம்மையாக்குவதற்கு எனக் குறிப்பிட்டு கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவ குழுவிற்கு முன்வைத்து குறித்த அங்கீகாரத்தை பெற்று சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | முறையான அங்கீகாரத்தை பெற்று கணக்கு மீதியை தீர்க்க வேண்டும். |
| (ஆ) | கெலிஓய பொது சந்தை இலக்கம் 19 கடையறையிலிருந்து கிடைக்க வேண்டிய வாடகையை பதிலீடு செய்ய தவறுடன் ரூபா 151,200 தொகை முற்பண கட்டுப்பாட்டு கணக்கிலிருந்து மற்றும் ரூபா 199,260 தொகை | 2024 ஆண்டில் சரி செய்வதென. | வைப்பு கணக்கில் செம்மையாக்க வேண்டிய கடை வாடகையை சரியாக செம்மையாக்க |

| | | | |
|---|---|---|---|
| | கடை வாடகை வைப்பு கணக்கில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் வேலை கடன்படுனர் ரூபா 7,362,767 தொகை மற்றும் ரூபா 1,290,555 ஆன வேலை கடன்கொடுனர் தொகை அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தன | ஆவணங்களை பரீட்சித்து இனங்கண்டு சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதிகளை இனங்கண்டு தீர்க்க வேண்டும். |

**1.6.4 தொங்கல் கணக்கு**

| விடயம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 46,226 ஆன தொங்கல் கணக்கு மீதியை கண்டறிந்து தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இடம்பெற்ற தவறை திட்டவட்டமாக இனங்காணாது மீளாய்வாண்டில், ஜர்னல் குறிப்பு மூலம் தொங்கல் கணக்கிற்கு ரூபா 365,838 தொகை வரவு மற்றும் ரூபா 10,254 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தன. | குறைபாடுகளை இனங்கண்டு தொங்கல் கணக்கை தீர்ப்பதென. | கணக்கு மீதிகளில் இடம்பெற்றுள்ள தவறை இனங்கண்டு சீராக்க வேண்டும். |

**1.6.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கூட்டுத் தொகை ரூபா 306,245 ஆன 02 சொத்து விடயங்களிற்குரிய பதிவேடு மற்றும் அட்டவணை சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், கணக்காய்வின் போது அவற்றை திருப்தி கரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | 2024 ஆண்டில் கணக்கிற்கு சரியான தகவல்களை உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதிகளை உறுதி செய்து கொள்ள தேவையான அட்டவணைகளை சரியாக பேணிக் கொள்ள வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 19(1)(xii) பிரிவு | விடய பொறுப்பு அமைச்சரின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி கெலிஓய பொது சந்தையில் 19 கடையறைகள் 2022 | விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டில் 30 ஆண்டுகளிற்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தன. | கடிதம் அனுப்புவதென. | |
| (ii) | 127 பிரிவு | சபையினால் பயன்படுத்தும் 87 மயானங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுவீகரிக்க தேவையான முன்நடவடிக்கை எடுக்கப்படுவதென . | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள மயானங்களின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| | 2020 ஒக்டோபர் 16 திகதிய இலக்கம் 18/2020 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவை 1 ஆம் பகுதியின் XIV அதியாயத்தின் 4.1 மற்றும் 4.1.1 | தமது சேவை தேவைப்பாட்டின் பிரகாரம், தனிப்பட்ட வகையில் பூர்த்தி செய்ய வேண்டிய அரச மொழித் தேர்ச்சி பாடநெறியில் பங்குபற்றிய ஏழு அலுவலர்களிற்கு ரூபா 95,576 பிரயாணப் படி மற்றும் இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | குறித்த அலுவலர்களிடமிருந்து அறவிட்டு அது தொடர்பாக அறிவிக்க நடவடிக்கை எடுப்பதென. | தாபன விதிக்கோவை அறிவுருத்தல் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| (i) | 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/03 கொண்ட சுற்றறிக்கையின் VI பந்தி | டென்டர் கோராது 02 கடையறைகள் குத்தகை வழங்கப்பட்டிருந்தன. | சுட்டிக் காட்டிய வியடம் தொடர்பாக விசாரணை நடாத்த நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/03 கொணட சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவு | சபையின் எழுத்துமூல அங்கீகாரமின்றி கடையறைக்கு புதிதாக பகுதி சேர்ப்பது, அமைப்பை மாற்ற முடியாத போதும், கெலிஓய வியாபார கட்டிடத் தொகுதியில் இலக்கம் 03 மற்றும் 04 கடைகளை ஒன்றிணைத்து ஒரு கடையறையாக தயாரிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (iii) | 2021 ஜுலை 08 திகதிய இலக்கம் 2235/54 கொண்ட நகர | கட்டிட திட்டத்தை அங்கீகரித்துக் கொண்ட 05 கட்டிடங்கள் அங்கீகார | கோவையை பின்னூட்டல் செய்து சட்ட | சட்ட ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளை / பிரமாணங்களின் 02 ஆம் அட்டவணை மற்றும் 1982 இன் 04 மற்றும் 1984 இன் 44 கொண்ட சட்டங்களால் திருத்திய 1978 இன் 41 கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 28 அ(3) பிரிவு | திட்டத்திற்கு இணங்காது நிர்மாணித்திருந்த போதும், சட்ட ரீதியான செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை. | ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,591,301 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 48,739,458 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டு இருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 12,925,000 | 11,880,628 | 13,118,345 | 34,141,333 | 13,156,000 | 12,978,577 | 9,803,046 | 35,615,728 |
| (ii) | வாடகை | 5,417,073 | 6,868,774 | 12,626,544 | 14,897,784 | 3,770,000 | 32,184,265 | 13,747,785 | 18,729,330 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 2,909,100 | 3,564,412 | 3,564,412 | -- | 2,450,000 | 2,989,008 | 2,702,508 | 994,300 |
| (iv) | ஏனைய வருமானம் | 54,961,100 | 43,051,101 | 83,098,985 | 105,048,056 | 22,114,750 | 52,309,537 | 88,717,013 | 37,053,107 |
| | மொத்தம் | 76,212,273 | 65,364,915 | 112,408,286 | 154,087,173 | 41,490,750 | 100,461,387 | 114,970,352 | 92,392,465 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் தொடர்பாக செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்கள் கடந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ள தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ள தகவல்களுடன் இணங்காததால், வருமானம் சேகரிக்கும் போது செயலாற்றுகை தொடர்பாக கருத்துத் தெரிவிக்க இயலாதிருந்தது. | பிரதான வருமான மூலம் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் இணங்குவதெனவும், கடந்த ஆண்டுளிற்குரிய பதிவேடுகளுடன் மீளாய்வாண்டின் பதிவேடுகளை பரீட்சித்து இந்த ஆண்டில் குறித்த இணக்கமின்மைகளை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | ஓவ்வொரு வருமான பதிவேடுகள் மற்றும் கணக்கு மீதிகளை இணக்கம் செய்து சீராக்க வேண்டும். |
| **(ஆ)** | **வீதவரி மற்றும் வரி** | | |
| (i) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் ஏற்பாடுகளை பின்பற்றாது, மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று அலகுகொன்றின் மொத்த நிலுவை தொகை ரூபா 20,000 இனை விஞ்சிய 05 ஆண்டுகளை விட அதிக காலமாக நிலவிவரும் 132 தனியார் ஆதனங்களின் நிலுவை வீதவரி ரூபா 4,668,738 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவை வீதவரி அறிவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக 03 அரச நிறுவனங்களின் 168 அலகுகளிலிருந்து நிலுவை வீதவரி ரூபா 682,299 அறவிட்டிருக்கவில்லை. | பிரதேச சபை சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வீதவரி அறவிட நடவடிக்கை எடுப்பதென. | அரச நிறுவனங்களில் இருந்து நிலுவை வீதவரியை அறவிட வேண்டும். |
| **(இ)** | **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்** | | |
| | மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,504,073 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 93,760,075 ஆனது. | காணி பதிவாளர் அலுவலகங்களிலிருந்து முத்திரை கட்டண அட்டவணை சரி செய்தல் மேற்கொள்வதன் மீது முத்திரை கட்டண நிலுவை மீதி மாற்றமடைவதென. | நிலுவை வருமானத்தை அழைப்பித்துக் கொள்ள வேண்டும். |

### 2.3. மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களிற்கு எதிராக என்னால் கடந்த ஆண்டினுள் விதித்த மிகை அறவீடு தொடர்பாக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியன்று ரூபா 1,085,636 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | முறையீட்டு விசாரணையை முடிவுறுத்தி அதனை உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பிய பின்னர் கிடைக்கும் கட்டளைகளின் மீது எஞ்சிய அறவீடுகளை மேற்கொள்வதென. | மிகை அறவீட்டை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளின் பிரகாரம், மலசல கழிவு எடுத்துச் செல்லல் மற்றும் கழிவகற்றல் பிரதேச சபையினால் மேற்கொள்ள வேண்டிய போதும், கலி வண்டியொன்றை பெற்றுக் கொள்ள மற்றும் மலசல சுத்திகரிப்பு அலகொன்றை ஆரம்பிக்க சபையின் கவனம் செலுத்தப்பட்ட இருக்கவில்லை. | எதிர்வரும் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு இந்த உத்தேசத்தை உற்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 1987 இன் ஆகஸ்ட் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 119 பிரிவின் பிரகாரம் சபையினால் வாராந்த சந்தை ஒன்றை நடாத்திச் சென்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பிரதேச செயலகத்துடன் தொடர்புபட்டு முறையாக வாராந்த சந்தையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | சட்டத்தில் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய 06 பெற வேண்டிய கணக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 133,991,591 ஆனது. அவற்றில் ஆண்டு 01 இற்கும் 05 ஆண்டிற்கும் இடையிலாக கால வீச்சளவிலான கூட்டுத் | குறித்த நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | பெற வேண்டிய கணக்கு மீதிகளை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை ரூபா 102,846,795 மற்றும் 05 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 28,014,684 இனை அறவிட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பிரதேச சபையினால் நாள் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தியுள்ள 07 நபர்களிற்காக 2020 மார்ச் முதல் 2022 மே வரை அரச சேவை சேமலாப நிதியத்திற்கு ஊழியரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 336,821 தொகை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்து சபை நிதியத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. அவ்வாறு செலுத்திய தொகையை அரச ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய போதும், தொழிலாளர் திணைக்களத்தில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு இந்த தொகை அனுப்பப்பட்டிருந்தது. | இதற்காக உரிய அறிவுறுத்தல் கிடைக்காமை மற்றும் தொழிலாளர் திணைக்களத்தால் செய்யப்பட்ட அறிவுறுத்தல் மீது இந்த தொகையை செலுத்த நேரிட்டதாக. | சட்டம், விதி பிரகாரம் நிறுவனங்களிற்கு செலுத்த வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டினுள் ரூபா 1,989,935 செலவில் புமுனுவ பித்தளை கைத்தொழில் சாலையை நிர்மாணித்திருந்த போதும், எதிர்பார்த்த நோக்கத்திற்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் இந்த கட்டிடத்தை குத்தகை வழங்க டெண்டர் கோரி நடவடிக்கை எடுத்துள்ளதென. | கட்டிடத்தை நோகத்துடனான பணிகளிற்கு ஈடுபடுத்த வேண்டும் |

**3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான கூட்டுத் தொகை ரூபா 23,152,179 ஆன 09 வாகனங்களில், ஒரு வானம் ஓராண்டிற்கு அதிக காலம் மற்றும் ஏனைய 08 வாகனங்கள் 03 ஆண்டுகளிற்கும் அதிக காலமாக விளைவற்று மற்றும் செலுத்த முடியாது காணப்பட்டன. | அரச மதிப்பீட்டை பெற்றுக் கொண்ட பின்னர் ஏலத்தில் விற்க வேண்டிய வாகனங்களை ஏலத்தில் விற்கவும் திருத்தி பயன்படுத்த முடியுமான வாகனங்களை திருத்தவும் நடவடிக்கை எடுப்பதென. | குறித்த செயற்பாடுகளை விரைவில் முடிவுறுத்த வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை பயன்படுத்தும் காணி மற்றும் 80 கட்டிடங்களின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தும் அரச காணிகளில் உள்ள மயானங்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதென. | சபைக்கு சொந்தமான காணிகளின் சட்ட ரீதியான உரிமையை உறுதி செய்து கொள்ள வேண்டும். |
| (ஆ) | குழாய் கிணறு களஞ்சியத்தின் கூட்டுத் தொகை ரூபா 424,463 ஆன அசையாத மிதியொன்று காணப்படுவதுடன், அந்த இருப்பை | எதிர்காலத்தில் குழாய் கிணறு தொழிநுட்பவியளார் ஒருவரை ஆட்சேர்த்த பின்னர் குழாய் கிணறு | இருப்பை பயன்படுத்த அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கையை |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்த அல்லது ஏனைய பயன்படுத்த முடியுமான நிறுவனத்திற்கு வழங்கவேனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்த வேலைகளிற்காக களஞ்சியத்தில் காணப்படும் பொருட்கள் தேவைபடுவதால், அந்த இருப்பை தொடர்ந்தும் பேணிச் செல்வதென. | மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | கிரி வவுல மானெல் கழிவு கொட்டி முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள 01 ஏக்கர், 01 ரூட், 25.69 பர்சஸ் காணியின் சட்ட ரீதியான உரிமையை சுவீகரித்திருக்கவில்லை. | காணியை சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 கருத்திட்டம், பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளர்யவாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் நிர்மாணிக்க திட்டமிட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 11,485,000 ஆன 07 அபிவிருத்தி கருத்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதியளவில் கருத்திட்டத்தை மேற்கொள்ளாது கைவிடப்பட்டிருந்தன. | பாதைகள் பதிவு செய்யப்படாமை, அதிக மழை மற்றும் சங்கம் கருத்திட்டத்தை மேற்கொள்ளாமை போன்ற காரணங்களின் மீது கருத்திட்டம் மேற்கொள்ளப்படவில்லையென. | திட்டமிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும். |

## 3.6 ஒப்பந்த நிர்வாக முறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபை நிதியத்தின் மூலம் வேகிரிய நாத தேவாலயத்தில் இருந்து கிரிகல அம்பலம பாதை கால்வாய் தொகுதி அபிவிருத்திக்காக மதிப்பீடொன்றை தயாரித்து உடுநுவர கிராம அபிவிருத்தி சங்கத்துடன் ரூபா 1,350,000 இற்கு நிர்மாணத்தை ஒப்படைத்து வேலையை பூர்த்தி செய்து, ரூபா 1,341,162 செலுத்தப்பட்டிருந்தது. கடிதக் கோவை பரீட்சிப்பின் போது, வேலை விடயம் 08 ஊடாக மி.மி 25 செட்டலின் பலகை (Form Work) பயன்படுத்த பாதை தொடர்பான நியம விலை பகுத்தாய்வு பிரகாரம் கால்வாய் தொகுதியை நிர்மாணிக்கும் போது, ரூபா 1,030 ஆன ST 112 வீதத்தை பயன்படுத்த வேண்டிய போதும், HSR இன் ST 64 வீதமான ரூபா 2,025 தொகையை பயன்படுத்திய காரணத்தால் 88 சதுர மீற்றரிற்கு ரூபா 87,560 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறுத்தற் பணத்திலிருந்து ஏற்பட்ட நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | குறித்த வீதங்களை பயன்படுத்தாது கொடுப்பனவு பரிந்துரைத்த அலுவலர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை** | | |
| அங்கீகார ஆளணியினர் மற்றும் உள்ளவாரான ஆளணியினருடன் ஒப்பிடுகையில் 02 பதவிகளில் 20 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 14 மிகைகளும் காணப்பட்டன. | மிகை அலுவலர்களை அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் மீது அந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளெதன. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| இடமாற்றம் செய்யப்பட்ட, ஓய்வு பெற்ற மற்றும் நானாவித காரணங்களால் கொடுப்பனவை புறக்கணித்துள்ள 20 அலுவலர்களிடம் இருந்து 2019 ஆண்டு முதல் நீண்ட காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 1,490,831 ஆன கடன் மீதியை அறவிட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டுகளின் ஊழியர் கடன் பதிவேட்டில் காணப்பட்ட பிரச்சினையான நிலைமைகள் காரணமாக, அவற்றை சரிசெய்து நடவடிக்கை மேற்கொள்வதெனவும், கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | சபைக்கு அறவிட வேண்டிய ஊழியர் கடனை அறவிட வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாலுகையும்

### உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் உள்ளக கணக்காய்வு தொடர்பான கடமைகள் இரண்டு அலுவலர்களிற்கு ஒப்படைத்திருந்த போதும், மீளாய்வாண்டினுள், 03 உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், ஆண்டினுள் போதிய உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக உள்ளக் கணக்காய்வு அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளதென. | போதிய உள்ளக கணக்காய்வை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |